141. ஒரு மூலக்கூறு நீரில் ஆக்சிஜன் அணுவும் இரு ஹைட்ரஜன் அணுக்களும் _______ என்ற கனஅளவு விகிதத்தில் இணைந்துள்ளன.

(1) 1 : 2 (2) 2 :1 (3) 8 : 1 (4) 1 : 8

142. காலமைன் என்று அழைக்கப்படுவது _______.

(1) சோடியம் கார்பனேட் (2) பொட்டாசியம் கார்பனேட்

(3) துத்தநாக கார்பனேட் (4) கால்சியம் கார்பனேட்

143. வினிகரின் வேதியல் பெயர் _______.

(1) சல்பியூரிக் அமிலம் (2) அசிட்டிக் அமிலம்

(3) நைட்ரிக் அமிலம் (4) கார்போனிக் அமிலம்

144. விட்ரியால் எண்ணெய் என்று அழைக்கப்படுவது _______.

(1) சல்பியூரிக் அமிலம் (2) அசிட்டிக் அமிலம்

(3) நைட்ரிக் அமிலம் (4) கார்போனிக் அமிலம்

145. பச்சை துத்தம் என அழைக்கப்படுவது எது?

(1) தாமிர சல்பேட் (2) இரும்பு சல்பேட்

(3) கால்சியம் சல்பேட் (4) கால்சியம் சல்பேட் ஹெமி ஹைட்ரேட்

146. மயில் துத்தம் என அழைக்கப்படுவது எது?

(1) தாமிர சல்பேட் (2) இரும்பு சல்பேட்

(3) கால்சியம் சல்பேட் (4) கால்சியம் சல்பேட் ஹெமி ஹைட்ரேட்

147. பாரிஸ் சாந்து என அழைக்கப்படுவது எது?

(1) தாமிர சல்பேட் (2) இரும்பு சல்பேட்

(3) கால்சியம் சல்பேட் (4) கால்சியம் சல்பேட் ஹெமி ஹைட்ரேட்

148. உலோகங்களின் _______ பண்பு ஆலய மணி தயாரிக்க பயன்படுகிறது.

(1) தகடாக மாறும் பண்பு (2) கம்பியாக நீளும் பண்பு

(3) வெப்பத்தை கடத்தும் பண்பு (4) ஒலி எழுப்பும் பண்பு

149. தீயணைக்கும் சாதனங்களில் பயன்படும் வேதிப்பொருள் _______.

LIVEWORKSHEETS

(1) சோடியம் கார்பனேட் (2) சோடியம் பை கார்பனேட்

(3) பொட்டாசியம் கார்பனேட் (4) கால்சியம் கார்பனேட்

150. கண்ணாடி தயாரிப்பில் _______ பயன்படுகிறது.

(1) கால்சியம் ஆக்சைடு (2) கால்சியம் கார்பனேட்

(3) கால்சியம் குளோரைடு (4) கால்சியம் ஆக்சி குளோரைடு

151. சுண்ணக்கட்டி தயாரிக்க பயன்படுவது _______.

(1) கால்சியம் ஆக்சைடு (2) கால்சியம் கார்பனேட்

(3) கால்சியம் குளோரைடு (4) கால்சியம் ஆக்சி குளோரைடு

152. கடின நீரை மென் நீராக்கப் பயன்படுவது _______.

(1) சோடியம் கார்பனேட் (2) சோடியம் பை கார்பனேட்

(3) பொட்டாசியம் கார்பனேட் (4) கால்சியம் கார்பனேட்

153. வெடிகள் தயாரிக்க _______ மற்றும் _______ பயன்படுகிறது.

(1) Mg, C (b) P, C (3) Mg, P (4) C, S

154. இரசவாதிகள் பயன்படுத்திய ஆர்சனிக் (Arsenic) குறியீடு _______.

(1)  (2) As (3) (4)

155. இயற்கையில் கிடைக்கும் 92 தனிமங்களில் எத்தனை தனிமங்கள் அலோகங்களாக உள்ளன ?

(1) 16 (2) 72 (3) 26 (4) 36

156. இயற்கையில் கிடைக்கும் 92 தனிமங்களில் எத்தனை தனிமங்கள் உலோகங்களாக உள்ளன?

(1) 82 (2) 72 (3) 74 (4) 71

157. நமக்குத் தெரிந்த மிக மென்மையான பொருள் _______.

(1) டால்க் (2) சுண்ணாம்பு பவுடர்

(3) மரத்தூள் (4) மண்

158. ஒப்புமை தருக.

பாதரசம் : திரவம் : : ஆக்ஸிஜன் : ?

(1) திட (2) வாயு (3) திரவம் (4) கூழ்மம்

159. ஒப்புமை தருக.

LIVEWORKSHEETS

மின்சாரத்தைக் கடத்தும் உலோகம் : தாமிரம் :: மின்சாரத்தைக் கடத்தும் அலோகம் : ?

(1) கிரா∴பைட் (2) சல்∴பர் (3) நைட்ரஜன் (4) ஹைட்ரஜன்

160. ஒப்புமை தருக.

_______ : தனிமங்களின் அடிப்படைத்துகள் :: தனிமம் : சேர்மங்களின் அடிப்படைத் துகள்

(1) மூலக்கூறு (2) அணு (3) சேர்மம் (4) கூழ்மம்

161. மூலக்கூறுகளை அவற்றில் அடங்கியுள்ள தனிம அணுக்களின் குறியீடு மற்றும் அவற்றின் எண்ணிக்கையைக் கொண்டு குறிக்கும் முறைக்கு _______ என்று பெயர்.

(1) வேதியியல் குறியீடு (2) கணிதக் குறியீடு

(3) வேதியியல் வாய்பாடு (4) கணித வாய்பாடு

162. கரிக்கோலில் (பென்சில்) இருப்பது _______.

(1) வைரம் (2) கந்தகம் (3) கிரா∴பைட் (4) அலுமினியம்

163. பொருத்துக.

a) இரும்பு - i) மின்கம்பிகள்

b) தாமிரம் - ii) தையல் ஊசி

c) டங்ஸ்டன் - iii) ராக்கெட் எரிபொருள் பற்றவைப்பானாக

d) போரான் - iv) மின் இழைகள்

(1) a - ii b - i c - iv d - iii (2) a - iii b - i c - iv d - ii

(3) a - i b - ii c - iv d - iii (4) a - i b - iii c - iv d - ii

164. பொருத்துக.

a) அணு - i) பருப்பொருள்களின் கட்டுமான அலகு

b) தனிமம் - ii) பல்வேறு வகை அணுக்கள்

c) சேர்மம் - iii) ஒரே வகை அணுக்கள்

d) மூலக்கூறு - iv) பருப்பொருள்களின் மிகச்சிறிய அலகு

(1) a - ii b - i c - iv d - iii (2) a - iii b - i c - iv d - ii

(3) a - i b - ii c - iv d - iii (4) a - i b - iii c - ii d - iv

NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:

165. அறுவை சிகிச்சை சாதனங்கள் தயாரிக்கப் பயன்படும் உலோகம் _______. **(NMMS-2011)**

LIVEWORKSHEETS

(1) எஃகு (2) வெண்கலம்

(3) துருப்பிடிக்காத எஃகு (4) டியூராலுமின்

166. தனிமத்தின் மிகச்சிறிய துகள் _______. [NMMS-2012]

(1) மூலக்கூறு (2) அணு (3) அயனி (4) சேர்மம்

167. புவியில் அதிக அளவில் உள்ள தனிமம் _______. [NMMS-2012]

(1) அலுமினியம் (2) சிலிக்கான் (3) இரும்பு (4) ஆக்ஸிஜன்

168. நீச்சல் குளத்தை சுத்தமாக வைத்திருக்க பயன்படும் வாயு _______. [NMMS-2012]

(1) ஹைட்ரஜன் (2) குளோரின் (3) ஆக்ஸிஜன் (4) நைட்ரஜன்

169. ஆர்சனிக் என்ற தனிமத்தின் குறியீடு _______. [NMMS-2012]

(1) Al (2) As (3) Ar (4) A

170. ஓர் ஓசோன் மூலக்கூறில் இருப்பது _______. [NMMS-2012]

(1) ஒரு ஆக்சிஜன் அணு (2) இரண்டு ஆக்சிஜன் அணுக்கள்

(3) மூன்று ஆக்சிஜன் அணுக்கள் (4) நான்கு ஆக்சிஜன் அணுக்கள்

171. சுட்ட சுண்ணாம்பு என்பது _______. [NMMS-2012]

(1) கால்சியம் ஆக்ஸி குளோரைடு (2) கால்சியம் ஹைட்ராக்சைடு

(3) கால்சியம் கார்பனேட் (4) கால்சியம் ஆக்சைடு

172. சோடியம் கார்பனேட் என்பதன் பொதுப்பெயர் _______. [NMMS-2012]

(1) ரொட்டிச் சோடா (2) பேக்கிங் பவுடர்

(3) சலவை சோடா (4) சலவைத்தூள்

173. சரியான பொருத்தம் [NMMS-2012]

தனிமத்தின் பெயர்		குறியீடு
(i) தங்கம்	-	(A) W
(ii) வெள்ளி	-	(B) Hg
(iii) டங்ஸ்டன்	-	(C) Ag
(iv) மெர்குரி	-	(D) Au

(1) (i) - (C) (ii) - (A) (iii) - (B) (iv) - (D) (2) (i) - (B) (ii) - (C) (iii) - (A) (iv) - (D)

(3) (i) - (D) (ii) - (C) (iii) - (A) (iv) - (B) (4) (i) - (D) (ii) - (C) (iii) - (B) (iv) - (A)

LIVEWORKSHEETS

174. ________ இல் மூலக்கூறுகளுக்கு இடையே உள்ள இடைவெளி குறைவு [NMMS-2014]

(1) திண்மம் (2) நீர்மம் (3) வாயு (4) கூழ்மம்

175. தாவரங்கள் மற்றும் விலங்குகள் சில தனிமங்களால் உருவானவை. தனிமங்களுடன் அதன் சதவீதத்தைப் பொருத்துக. [NMMS-2016]

தனிமங்கள்		சதவீதம்
(a) ஆக்சிஜன்	-	(i) 18%
(b) கார்பன்	-	(ii) 10%
(c) நைட்ரஜன்	-	(iii) 65%
(d) ஹைட்ரஜன்	-	(iv) 3%

(1) (a) - (iii) (b) - (i) (c) - (iv) (d) - (ii) (2) (a) - (iii) (b) - (iv) (c) - (ii) (d) - (i)

(3) (a) - (ii) (b) - (iii) (c) - (iv) (d) - (i) (4) (a) - (ii) (b) - (iv) (c) - (i) (d) - (iii)

LIVEWORKSHEETS